தினகரன்
14-09-2011
தூத்துக்குடி

கோயில் வி...
பால்கு...
ஊர்வல...
பக்கம் 1...

புத...



கோவில்பட்டியில் பள்ளி சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தவரை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யகோரி சுப்பிரமணியபுரம், ஸ்டாலின் காலனியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### சிறுமியை பலாத்காரம் செய்தவரை

# குண்டாசில் கைது செய்யக்கோரி ஆர்டிஓ அலுவலகம் முற்றுகை

## கோவில்பட்டியில் பரபரப்பு

**கோவில்பட்டி, செப். 14:** கோவில்பட்டியில் சிறுமியை பலாத்காரம் செய்த தொழிலாளியை குண்டர் சட்டத்தில் கைது செய்யக்கோரி ஆர்டிஓ அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டனர்.

கோவில்பட்டி சுப்பிரமணியபுரம் 4வது தெருவை சேர்ந்தவர் முத்துக்குமார். இவருக்கு மாரியம்மாள் என்ற மனைவியும், அமுதா(10)(பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற மகளும் உள்ளனர். சிறுமி அமுதா அங்குள்ள டி.டி.டி.ஏ பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த 11ம் தேதி சிறுமியை பாண்டவர்மங்கலத்தை சேர்ந்த கட்டிட தொழிலாளி அய்யாத்துரை(37) பலாத்காரம் செய்தார். இதுகுறித்து கோவில்பட்டி மேற்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து அய்யாத்துரையை கைது செய்தனர்.

இந்நிலையில் சிறுமியை பலாத்காரம் செய்த அய்யாத்துரையை குண்டர் தடுப்பு சட்டத்தின்கீழ் கைது செய்யவும், தனியார் மருத்துவமனையில் சிறுமியை சேர்த்து சிகிச்சை அளிக்கவும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு ரூ.5 லட்சம் வழங்கக்கோரியும் நேற்று சுப்பிரமணியபுரம், ஸ்டாலின் காலனியை சேர்ந்த பெண்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் ஆதிதமிழர் பேரவை மற்றும் அருந்ததியர் சமுதாயம் சார்பில் ஊர்வலமாக சென்று ஆர்டிஓ அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

தொடர்ந்து அவர்கள் ஆர்டிஓ அலுவலக அதிகாரி ஜோதியிடம் ஆதிதமிழர் பேரவை நகர செயலாளர் சங்கர் தலைமையில், ஊர்த்தலைவர் ஜெயகண்ணன், தீபா, சங்கரலிங்கம் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை மனு அளித்தனர். இந்த சம்பவம் கோவில்பட்டியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

15-09-2011.

தினத்தந்தி



கோவில்பட்டி அரசு ஆஸ்பத்திரியை பொதுமக்கள் நேற்று முற்றுகையிட்ட காட்சி.

### கோவில்பட்டி அரசு ஆஸ்பத்திரி

# பொதுமக்கள் முற்றுகை

கோவில்பட்டி, செப்.15-

கோவில்பட்டி அரசு ஆஸ்பத்திரியை பொது மக்கள் நேற்று முற்றுகை யிட்டனர்.

### பாலியல் பலாத்காரம்

கோவில்பட்டி சுப்பிரமணியபுரத்தை சேர்ந்தவர், முத்துக்குமார். அவருடைய 10 வயது மகளை, மேலபாண்டவர் மங்கலம் கிராமத்தை சேர்ந்த கட்டிட தொழிலாளி அய்யாத்துரை என்பவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், பின்னர் மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இது குறித்த புகாரின் பேரில் போலீசார் அவரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். இதையொட்டி அய்யாத்துரையை மருத்துவ பரிசோதனை செய்ய கோர்ட்டு உத்தரவிட்டது. இந்த நிலையில், அய்யாத்துரையை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் கோவில்பட்டி உதவி கலெக்டர் அலுவலகம் முன்பு ஆதிதமிழர் பேரவை மற்றும் அருந்ததியர் சமுதாயத்தைச்சேர்ந்தவர்கள் முற்றுகை போராட்டம் நடத்தினர். நேற்று அய்யாத்துரையை மருத்துவ பரிசோதனைக்காக கோவில்பட்டி அரசு ஆஸ்பத்திரிக்கு போலீசார் அழைத்து வந்தனர்.

### முற்றுகை

இதுகுறித்த தகவல் அறிந்ததும் சுப்பிரமணியபுரம், ஸ்டாலின் காலனி, துறையூர், தச்சநல்லூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த ஆதித்தமிழர் பேரவை மற்றும் அருந்ததியர் சமுதாயத்தை சேர்ந்த ஆண்களும், 300-க்கும் மேற்பட்ட பெண்களும் நேற்று கோவில்பட்டி அரசு ஆஸ்பத்திரியை முற்றுகையிட்டனர். அழுகிய முட்டை, அழுகிய தக்காளி, செருப்பு போன்றவற்றை அய்யாத்துரை மீது வீசுவதற்காக கொண்டு வந்து இருந்தனர்.

இதை அறிந்த கோவில்பட்டி கிழக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் செல்வம், மேற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் விஜயகுமார், சப்-இன்ஸ்பெக்டர்கள் லதா, கிருபா, ராஜேசுவரி மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

முற்றுகை போராட்டம் நடத்தியவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தையில், அய்யாத்துரை மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை கிடைக்க ஏற்பாடு செய்வோம் என்று கூறியதை தொடர்ந்து முற்றுகை போராட்டத்தை கைவிட்டு அவர்கள் கலைந்து சென்றனர். அதன் பின்னர் அய்யாத்துரையை மருத்துவ பரிசோதனைக்கு போலீசார் அழைத்துச் சென்றனர்.

தினத்தந்தி 14-09-2011



கோவில்பட்டியில் உதவி கலெக்டர் அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியபோது எடுத்த படம்.

### கோவில்பட்டி உதவி கலெக்டர் அலுவலகத்தை

# பெண்கள் முற்றுகையிட்டு போராட்டம்

கோவில்பட்டி, செப்.14-

கோவில்பட்டியில் உதவி கலெக்டர் அலுவலகத்தை பெண்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள்.

## பாலியல் பலாத்காரம்

கோவில்பட்டி அருகே கீழ பாண்டவர் மங்கலத்தை சேர்ந்தவர் அய்யாத்துரை. இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு சுப்பிரமணியபுரத்தை சேர்ந்த ஒரு சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், அந்த சிறுமிக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படுகிறது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து அய்யாத்துரையை கைது செய்தனர்.

## முற்றுகை

இந்த நிலையில் அவரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் ஜெயிலில் அடைக்க வேண்டும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி ஆதித்தமிழர் பேரவை மற்றும் அந்த சிறுமியின் உறவினர்களும் கோவில்பட்டி உதவி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று முற்றுகை போராட்டம் நடத்தினர்.

இந்த முற்றுகை போராட்டத்துக்கு ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் மனோகர் தலைமை தாங்கினார். நகர செயலாளர் சங்கர், கவர் தலைவர் கோவிந்தன் உள்பட ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

உதவி கலெக்டர் அலுவலகத்தில் உள்ள தலைமை எழுத்தர் ஜோதியிடம் மனு கொடுத்துவிட்டு அனைவரும் கலைந்து சென்றனர்.



சிறுமியை பலாத்காரம் செய்த தொழிலாளி மீது செருப்பு மற்றும் முட்டையை வீச கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் பொதுமக்கள் திரண்டனர். உள்படம்: தொழிலாளி அய்யாத்துரை.

## சிறுமியை பலாத்காரம் செய்த

# தொழிலாளி மீது செருப்பு முட்டை வீச முயற்சி

### கோவில்பட்டியில் பரபரப்பு

கோவில்பட்டி, செப். 15: கோவில்பட்டி சுப்பிரமணியபுரம் 4வது தெருவை சேர்ந்தவர் முத்துக்குமார். இவருக்கு மாரியம்மாள் என்ற மனைவியும், அமுதா(10) (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற மகளும் உள்ளனர். சிறுமி அமுதா அங்குள்ள டிடிடிஏ பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த 11ம் தேதி சிறுமியை பாண்டவர்மங்கலத்தை சேர்ந்த கட்டிட தொழிலாளி அய்யாத்துரை(37) பலாத்காரம் செய்தார். இதுகுறித்து கோவில்பட்டி மேற்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து அய்யாத்துரையை கைது செய்தனர். சிறுமியை பலாத்காரம் செய்த அய்யாத்துரையை குண்டர் தடுப்பு சட்டத்தின்கீழ் கைது செய்யக்கோரி அப்பகுதியை சேர்ந்த பெண்கள் நேற்று முன்தினம் ஆர்டிஓ அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இந்நிலையில் மரபணு சோதனைக்காக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அய்யாதுரையை போலீசார் நேற்று அழைத்து வந்தனர். இதையறிந்த சுப்பிரமணியபுரம் மற்றும் ஸ்டாலின் காலனி பெண்கள் செருப்பு, முட்டை, வாரியல், தக்காளி போன்றவற்றை அய்யாதுரை மீது வீச மருத்துவமனை வளாகத்தை முற்றுகையிட்டனர்.

தகவலறிந்த மேற்கு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் லதா முற்றுகையிட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இதையடுத்து பெண்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.






மாவட்ட அரசுதலைமை மருத்துவமனை
24 மணிநேர
தாய்சேய் அவசரகால

ஆதித்தமிழர் விடுதலையே !                                                    அனைவருக்கும் விடுதலை!!



# ஆதித்தமிழர் பேரவை



## தூத்துக்குடி மாவட்டம்.


ரா.வே.மனோகர்
மாவட்ட செயலர்
3/234, அம்பேத்கார் நகர், கனநீர் திட்ட குடியிருப்பு எதிரில், முத்தையாபுரம் அஞ்சல், தூத்துக்குடி – 5.


நாள் : 14-09-2011

பெறுநர்

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி.

ஐயா,

பொருள்: 10வயது பள்ளி மாணவி அன்னலெட்சுமியை பாலியல் பலாத்காரம் செய்த காமகொடூரன் பாண்டவர்மங்கலம் அய்யாத்துரையை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யக் கோருவது – சம்பந்தமாக.

-----

வணக்கம்,

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சுப்பிரமணியபுரம் 4வது தெருவைச் சேர்ந்த முத்துக்குமார் மகள் அன்னலெட்சுமி (வயது 10) T.D.T.A. பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வரும் ஏழை அருந்ததியர் மாணவி. கடந்த 11.09.2011 அன்று சிறுமி அன்னலெட்சுமியின் தாயார் மாரியம்மாள் பல்லக்கு ரோட்டில் உள்ள SI ஆறுமுகம் என்பவர் வீட்டு பால் காய்ச்சும் விழாவில் சாப்பாட்டு எச்சில் இலை எடுக்கும் பணிக்குச் சென்ற போது கூடவே சிறுமி அன்னலெட்சுமியையும் அழைத்துச் சென்று இருக்கிறார். பால்காய்ச்சு வீட்டில் தாயார் மாரியம்மாள் வேலை செய்து கொண்டிருந்தபொழுது வெளியே விளையாடிக் கொண்டிருந்த அன்னலெட்சுமியை பள்ளர் சமூகத்தை சேர்ந்த பாண்டவர்மங்களம் அய்யாத்துரை என்பவன் பச்சிளம் சிறுமி என்று பாராமல் பட்ட பகலில் பாலியல் பலாத்காரம் செய்துள்ளான்.

-2-

சிறுமி அன்னலெட்சுமி உடலளவில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு பிறப்பு உறுப்பில் தொடர்ந்து இரத்தப்போக்கு வெளியேறிக்கொண்டிருக்கும் நிலையிலும் யாரும் அருகில் சென்றாலே அச்சப்படும் அளவிற்கு மனதளவிலும் பாதிக்கப்பட்டு பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார். மேற்படி காமகொடூரனை மேற்கு காவல் நிலையத்தாரால் கைது செய்து குற்ற எண்: 981/2011-ல் பிரிவு 307,376 IPCயின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. பச்சிளம் சிறுமி என்று பாராமல் பாலியல் பலாத்காரம் செய்த காமக்கொடூரன் பாண்டவர்மங்கலம் அய்யாத்துரை மீது குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும்.
2. உடலளவிலும்,மனதளவிலும் பாதிக்கப்பட்ட சிறுமி அன்னலெட்சுமியை தனியார் மருத்துவமனையில் சேர்த்து சிறப்பான சிகிச்சை அளித்திட நடவடிக்கை எடுத்திடவும்
3. தமிழக அரசு சிறுமி அன்னலெட்சுமிக்கு இழப்பீடாக ரூ.5லட்சம் வழங்கிடவும்
4. குழந்தைகள் மீதான தொடரும் பாலியல் வன்கொடுமைகளுக்கு சிறப்பு சட்டம் இயற்றியும் கடுமையான தண்டனைகளை நடைமுறைப்படுத்தவும்.
5. பாதிக்கப்பட்ட மாணவியை அரசே தத்தெடுத்து படிக்கவைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இப்படிக்கு,

(மாவட்ட செயலர்)

நகல்:

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், (தனிப்பிரிவு)
   தமிழ்நாடு அரசு,
2. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி.

# 10 வயது சிறுமி அன்னலட்சுமிக்கு பாலியல் வன்கொடுமை

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரத்தில் சுப்பிரமணியபுரம், 4-வது தெரு, அருந்ததியர் பகுதியைச் சார்ந்த முத்துக்குமார், மாரியம்மாள் ஆகிய தம்பதிகளின் மகள்தான் அன்னலட்சுமி. அன்னலட்சுமியின் பெற்றோர் படிப்பறிவற்ற கூலித் தொழிலாளர்கள் ஆவார்கள். மிகவும் ஏழ்மைப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அன்னலட்சுமி 5-ம் வகுப்பு படித்து வரும் 10 வயது மாணவியாவாள்.

கடந்த 11.09.2011 அன்று இச்சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாக செய்தி வெளிவந்தது. பாண்டவர்மங்களம் ஊரைச் சார்ந்த அய்யாதுரை என்ற பள்ளர் சமூகத்தைச் சார்ந்த காமக்கொடூரன் மிகக் கொடூரமான முறையில் சிறுமியை வன்கொடுமை செய்துள்ளார்.

தாய் மாரியம்மாள், பல்லக்கு வீதியைச் சார்ந்த உதவி ஆய்வாளர் ஆறுமுகம் அவர்கள் புதுமனை புகுவிழா செய்வதால் அவரின் அழைப்பின்படி பால் காய்ச்சும் நிகழ்ச்சிக்கு பணி செய்வதற்காக தன் குழந்தையையும் அழைத்துக் கொண்டு சென்றார். தாய் வேலை செய்யும் நேரத்தில் சிறுமி அன்னலட்சுமி அந்த வளாகத்தில் உள்ள மணல் திட்டில் விளையாடிக் கொண்டிருந்தாள். கட்டிடத்தின் மேல் பகுதியில் ஏதோ மறைவான இடத்தில் நின்று கொண்டு இதை நோட்டமிட்ட அய்யாதுரை (வயது 38) கழுகு மாதிரி கீழே இறங்கிவந்து சிறுமியின் வாயைப் பொத்திக்கொண்டு வேறு இடத்திற்கு தூக்கிச் சென்றான். அங்கு வன்கொடுமையில் ஈடுபட்டான். அதன்பிறகு குழந்தையின் கழுத்தை நெறித்து கொலை செய்ய முயன்றான். இந்நிகழ்ச்சியை தொலைவில் இருந்து பார்த்த ஒரு பெண் ஓடிவந்து கூச்சல் போட்டாள். சத்தம் கேட்டு அங்குள்ள மக்கள் கூடினார்கள். அய்யாதுரை ஓடிவிட்டான். சிறுமியின் தாயும், மற்றவர்களும் சேர்ந்து சிறுமியை ஆட்டோ ரிக்ஷாவில் ஏற்றி கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். மருத்துவமனை செல்லும் வழியில் ஓரிடத்தில் கடை ஓரமாக அய்யாதுரை நின்று கொண்டிருந்தான். சிறுமி தன்கூட உள்ளவர்களிடம் அவனை அடையாளம் காட்டினாள். மக்கள் அவனைப் பிடித்து காவல்நிலையத்தில் ஒப்படைத்தார்கள். சிறுமியின் அப்பா முத்துக்குமார் கோவில்பட்டி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்.

சிறுமியின் பிறப்புறுப்பு பிளேடால் கிழிக்கப்பட்டிருந்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுமிக்கு இரத்தப்போக்கு அதிகமாய் இருந்தது. சிறுமி இரத்த வெள்ளத்தில் தாங்க முடியாத வலியால் துடிதுடித்தாள். கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமி 12.09.2011 அன்று பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டாள். காவல்துறை அய்யாதுரையை கைது செய்தார்கள். ஆனால் போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதால் அப்பகுதி ஆதித் தமிழர் பேரவை நிர்வாகிகள் காவல்துறையை அணுகினார்கள். காவல்துறையின் இந்த மெத்தனப்போக்கை கண்டித்தும், அய்யாதுரையை குண்டர் தடுப்புச் சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து சிறையில் அடைக்குமாறும் வலியுறுத்தி 13.09.2011 அன்று காலை பதினோரு மணியளவில் கோவில்பட்டி கோட்டாட்சியார் அலுவலகத்தை ஆதித் தமிழர் பேரவை முற்றுகையிடுவதாக செய்தி அறிந்து கோவையிலிருந்த நான் கோவில்பட்டி செல்ல தீர்மானித்தேன். 12.09.2011 இரவு 12.00 மணிக்கு கோவை, சிங்காநல்லூர்

பேருந்து நிலையத்திலிருந்து பேருந்தில் பயணம் செய்து 13.09.2011 காலை 8.30 மணிக்கு கோவில்பட்டி பேருந்து நிலையம் சென்றடைந்தேன். அங்கு வந்த கோவில்பட்டி நகர கிளையைச் சார்ந்த ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள் அவர்களுடைய பகுதிக்கு அழைத்துச் சென்றார்கள். முற்பகல் 11.00 மணியளவில் அருந்ததியர் ஆண்களும், பெண்களும் திரளாக கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு கூடினார்கள். 12.00 மணியளவில் ஆதித் தமிழர் பேரவை தூத்துக்குடி மாவட்ட செயலாளர் தோழர் மனோகரன் தலைமையில், தோழர் சு.க. சங்கர், ஆதித் தமிழர் பேரவை மாநில கொள்கைப் பரப்பு செயலாளர் ஆகிய நானும், மற்றும் பேரவை நிர்வாகிகளும், தோழர்களும், அருந்ததியர் பொதுமக்கள் சார்பிலும் கோட்டாட்சியர் அலுவலகத்தை கோஷங்களுடன் முற்றுகையிட்டு அய்யாதுரையை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்து தண்டிக்க வேண்டும், சிறுமி அன்னலட்சுமியை தனியார் மருத்துவமனையில் சேர்த்து சிறப்பு மருத்துவஉதவி அளிக்க வேண்டும், சிறுமிக்கு 5 லட்சம் ரூபாய் நஷ்டஈடு நிதி கொடுக்க வேண்டும், சட்டமன்றத்தில் சிறுவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சிறப்புச் சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர்ந்து நீதி வழங்க வேண்டும், சிறுமி அன்னலட்சுமியை அரசே தத்தெடுத்து அரசின் செலவில் முழு கல்வி கொடுக்க வேண்டும், சிறுமி மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதால் சிறப்பு மருத்துவ உதவி அளித்து குணப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளுடன் கோட்டாட்சியருக்கு ஆதித் தமிழர் பேரவை கோரிக்கை மனு கொடுத்தோம். அதன்பிறகு மக்கள் தொலைக்காட்சிக்கு நானும் மற்றும் புஷ்பம் என்கிற அருந்ததியர் பெண்ணும் பேட்டி கொடுத்தோம்.

அங்கிருந்து (கோவில்பட்டி) பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவ உதவி பெறும் சிறுமி அன்னலட்சுமியை சந்திக்க மாலை 5.00 மணிக்கு பேரவை தோழர்களுடன் சென்றோம். சிறுமி மிகவும் பரிதாபமான நிலையில் படுத்திருந்தாள். மனநிலை குன்றிய குழந்தைபோல் சில சமயங்களில் சிரிப்பதும், அடிக்கடி அழுவதுமாக படுத்துக் கிடந்தாள். அதிக இரத்தப் போக்கால் பாதிக்கப்பட்டு மிகவும் சோர்வான நிலையில் காணப்பட்டாள். மனிதர்களைப் பார்ப்பதற்கே அஞ்சுகின்ற மாதிரி இருந்தாள். சிறுமி அழுதுகொண்டே இருந்ததால் பேச இயலவில்லை. அதன்பிறகு சிறுமியின் தந்தையை சந்தித்துப் பேசினேன். அவரும் மிகவும் வேதனையுடன் சோர்வான நிலையில் இருந்தார். சிறுமியின் தாய் ஊருக்கு சென்றுவிட்டதால் பேச இயலவில்லை. உறவினர்களிடம் பேசுகையில் அவர்கள் நடந்த செய்தியை உறுதிப்படுத்தினார்கள். இரவு 9.40 மணியளவில் கோவைக்கு திரும்பினேன்.

நேற்றைய தினம் 14.09.2011 அன்று மருத்துவ பரிசோதனைக்காக கொண்டு வரப்பட்ட அய்யாதுரையை சுமார் 100-க்கும் மேற்பட்ட அருந்ததியர்கள்கூடி காவல்துறையினரின் முன்பாகவே சரமாரியாக அடித்ததாக செய்தி வந்தது. அதன்பிறகு காவல்துறையினர் சுமார் 10-க்கும் மேற்பட்ட பள்ளர் இனத்தைச் சார்ந்த வழக்கறிஞர்களின் துணையுடன் அய்யாதுரையை பாளையங்கோட்டை சிறையில் அடைத்ததாக செய்தி வெளிவந்தது. அந்த வழக்கறிஞர்கள் ஆதித் தமிழர் பேரவை வழக்கறிஞர் தோழர் விஜயகுமாரைப் பார்த்து கிண்டலாகப் பேசியதாக தெரிகிறது. சிறைக்கு முன்னால் அணிவகுத்து நின்று ‘‘பெயில் போடுடா, பார்ப்போம் என்ன நடக்கிறது’’ என்று குமாஸ்தாவை விட்டு பேசினார்களாம்.

சாதியின் சீற்றத்தையும், ஏற்றத்தையும் சட்டம் படித்த வழக்கறிஞர்களே வெளிப்படுத்துவது கேவலமாக உள்ளது. சட்டமேதை அம்பேத்கர் எழுதி பிச்சை கொடுத்த அரசியல் சட்டத்தைப் படித்த இவர்கள் மனிதர்களா ? மனித மாண்பின் மேன்மை இவர்களுக்கு தெரியுமா ?

அடுக்கப்பட்ட மூட்டைகளில் அடிமூட்டையாக உள்ள அருந்ததியர் மக்களுக்கு சகோதர சாதிகளிடமும்கூட பாதுகாப்பு இல்லை என்று மேற்கண்ட கொடூர நிகழ்ச்சி மட்டுமல்ல, பல நிகழ்ச்சிகளில் நிரூபணமாகியுள்ளது.

இந்த நிலையில் உள்இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் சமூக நீதிக்கெதிரான தலைவர்களை புரிந்து கொள்ள வேண்டிய பொறுப்பு அருந்ததிய அடித்தட்டு மக்கள் மட்டுமல்ல, அறிவுஜீவிகள் என தங்களை தாங்களே அழைத்துக் கொள்பவர்களும் புரிந்து கொண்டால் சரி!

அய்யாதுரை மீது இந்திய தண்டனைச் சட்டம் **376, 307** ஆகிய பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கை எண்.**981/2011**-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணவேணியின் மீது நடைபெற்ற கொடூரத் தாக்குதல் தொடர்பான இயக்கத்தை ஆதித் தமிழர் பேரவை எடுத்துச் செய்வதைப் போன்று, இந்த கொடுமையான வழக்கையும் ஆதித் தமிழர் பேரவை எடுத்துப் போராடி வருகிறது.

**தீபா**

கொள்கை பரப்பு செயலாளர்

ஆதித் தமிழர் பேரவை